**இறை அருளினாலும் தூய திருத்தூதர் ஆட்சிப்பீடத்தின் அருளினாலும், திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகிய நாம், நம் மறைமாவட்டத்திலுள்ள சகல அருட்பணியாளர்கள், துறவியர்கள், பொதுநிலை விசுவாசிகள் அனைவருக்கும் இறைவனின் அருளும், ஆசீரும் வேண்டி எழுதும்,**

# *2009ம் ஆண்டிற்கான மேய்ப்புப்பணி திட்டமிடல் சுற்றுமடல்*

கிறிஸ்துவில் அன்பார்ந்த இறைமக்களே!

கிறிஸ்து பிறப்பு, புத்தாண்டு நல்வாழ்த்துக்களை முதற்கண் உங்கள் அனைவரோடும் பகிர்ந்து கொள்வதில் பேருவகை கொள்கின்றோம். யுத்தத்தி னாலும், வன்முறையினாலும் இருள் கவ்வியிருந்த ஓர் ஆண்டினைக் கடந்து புதியதொரு ஆண்டிலே காலடியெடுத்து வைத்துள்ள இவ்வேளையிலே, நாம் ஆவலோடு ஏங்கித் தவிக்கின்ற வன்முறைகளற்ற சமாதான பூமி இம்மண்ணில் மலருமா என்கின்ற ஐயப்பாடு எம்மை வருத்தத்தில் ஆழ்த்தி யுள்ளது. இவ்வாறான இருள் சூழ்ந்த, குழப்பகரமான சூழ்நிலையில், ***"என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு, என் பாதைக்கு ஒளியும் அதுவே"*** *(திபா119: 115)* எனும் திருப்பாடல் நமக்கு ஆறுதல் அளிப்பதாயும், தேற்றுதல் தருவதாயும் அமைந்து வாழ்வுக்கு ஒளியாகவும், வழியாகவும் திகழ்கின்றது.

திட்டமிடல் மையச்செய்தி:

முன்னதாக கடந்த ஆண்டிலே திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் அவர்களால் விடுக்கப்பட்ட, ***திருத்தூதர் பவுலின் 2000ம் பிறப்பு யூபிலி ஆண்டினை*** தொடர்ந்தும் இவ்வாண்டில் புதிய முனைப்புக்களுடன் முன்னெடுப்போம்;

இரண்டாவதாக, கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் உரோமையில் நடந்து முடிந்த 12வது உலக ஆயர்களின் பொது மன்றத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம், ***"திருச்சபை வாழ்விலும், பணியிலும் இறைவார்த்தை"*** எனும் தொனிப்பொருளிலும்;

மூன்றாவதாக, இலங்கைத் திருநாட்டின் திருத்தூதர் பவுலென அழைக்கப்பெறும், ***முத்திப்பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகளாரின்*** விண்ணகப் பிறப்பின் 300வது ஆண்டு விழாவினை, எதிர்வரும் 2011ம் ஆண்டில் கொண்டாட முனைகையில், அவரது ***நற்செய்தி அறிவிப்பு முயற்சிகளை*** மறைமாவட்ட ரீதியில் முன்னெடுக்கவும், அழைப்பு விடுக்கின்றோம்.

அதேவேளையில் கடந்த ஆண்டில் நடந்து முடிந்த எமது மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாட்டின் கருப்பொருளாகிய, ***"இறைவார்த்தைப் பணியில் ஊக்குவிப்பாளர் களின் உருவாக்கத்தை முதன்மைப்படுத்திய பவுலின் உருவாக்கம்"*** எனும் தலைப்பில் இனங்காணப்பட்ட மேய்ப்புப்பணி சார்ந்த இலக்குகளை, இவ்வாண்டில் பங்குத் திருச்சபையின் வாழ்வியலில் சிறப்பாக எட்டிட, இறையாவியானவரின் துணைவேண்டி கீழ்வரும் முயற்சிகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கின்றோம்.

1. தூய பவுல் சார்ந்த உருவாக்கம்:

கடந்த ஆண்டு மேய்ப்புப்பணி சுற்றுமடலில் நாம் குறிப்பிட்டுள்ளவாறு, தம் போதனைகள் வாயிலாக கிறிஸ்தவத்தின் அடிப்படை இறையியலை, வரைவிலக்கணப் படுத்தியதுடன், கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்வதற்கான வழிகாட்டல்களை கோடிட்டு காட்டிய தூய பவுலின் முன்மாதிரிகையினை, இவ்வாண்டிலும் தொடர்ச்சியாக பின்பற்றுவது சாலச் சிறப்பாகும். தூய பவுல் பற்றிய நமது விவிலிய, இறையியல் அறிவினை இன்னும் ஆழமாக்கி, அதனூடாக இறைவார்த்தையில் ஆழப்பதிந்து, உண்மையான இறைவார்த்தைப் பணியாளராக, இவ்வாண்டில் பங்குத் திருச்சபை உறுப்பினர்கள் திகழ வேண்டுமென்பது எமது விருப்பமாகும். அவை நிறைவேறும் வண்ணம் பின்வரும் செயற்திட்டங்களை முன்னெடுக்கவும் பரிந்துரை செய்கின்றோம்:

***அ) மறைமாவட்ட ரீதியாக:***

1. மறைமாவட்ட வெளியீடுகளில் பவுல் சார்பான தொடர் கட்டுரைகளை பிரசுரித்து ஆன்மீக விருத்திக்கு உதவுதல்;
2. பவுலின் ஒளியில் மறைமாவட்ட போட்டிகளை ஒழுங்கு செய்தல்;
3. கிறிஸ்தவ ஒன்றிப்பு, பல்சமய உரையாடல் முயற்சிகளில் திறந்த உள்ளத்துடன் ஈடுபடல்.

***ஆ) மறைக்கோட்ட ரீதியாக:***

1. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பவுல் சார்ந்த விவிலிய, இறையியல் தொடர் உருவாக்கல் பயிற்சியினை தொடர்ந்து முன்னெடுத்தல்;
2. சமூகத்தொடர்பு சாதனங்ளைப் பயன்படுத்தி நவீன, பாரம்பரிய கலை வடிவங் கள் ஊடாக, கலைவழி நற்செய்தி சான்று பகிர்தலுக்கு உயிர் கொடுத்தல்.

***இ) பங்குகள் ரீதியாக:***

1. ஆலயத் திருவிழாக்களின் போது மறையுரை கருப்பொருளாக, பவுலின் இறையூட்டலை பயன்படுத்தல்;
2. அன்பிய ஒன்றுகூடல்களிலும், பகிர்வுகளிலும், பவுலின் இறைவார்த்தைப் பகுதிகள் பற்றிய தெளிவினைப் பெறல்;
3. திருமுக வாசக விளக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

2. இறைவார்த்தைப் பணியாளர்:

12வது உலக ஆயர்மன்ற ஒன்றுகூடல் அழைப்பிற்கேற்ப இறைவன் எமக்கு எழுதிய அன்பு மடலாகிய இறைவார்த்தையின்மீது பற்றும், ஆர்வமும் கொள்ள வேண்டும். அங்கு குறிப்பிட்டுள்ளவாறு நான்கு தலையாய பண்புகளில் எமது இறைவார்த்தை மீதான தாகம் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்று விரும்புகின்றோம். அவை முறையே:

1. இறைவார்த்தையின் குரல் - இறைவெளிப்பாடு
2. இறைவார்த்தையின் திருவதனம் - இயேசுக்கிறிஸ்து (யோவான் 1:14)
3. இறைவார்த்தையின் இல்லம் - திருச்சபை (திருத்தூதர் பணி 2: 42)
4. இறைவார்த்தையின் வழி - நற்செய்தி அறிவிப்பு (மத்தேயு 28: 16).

இறைவார்த்தை எமது வாழ்வின் ஆதாரமாகி, அதன்வழி நடைபயில அழைப்பு விடுக்கின்றோம். இறைவார்த்தைப் பணியாளர்கள் பங்குகள்தோறும் உருவாகிடவும், நற்செய்தி அறிவிப்புப்பணி பன்மடங்கு பெருகிடவும் பின்வரும் முயற்சிகளை முன்னெடுப்போம்:

***அ) மறைமாவட்ட ரீதியாக:***

1. நாளாந்த இறைவார்த்தை வாசிப்பு, தியானம் போன்றவற்றை அதிகரித்தல்;
2. விவிலிய அறிவுக்கு விருந்தாகும் மாநாடுகளை கூட்டுதல்.

***ஆ) மறைக்கோட்ட ரீதியாக:***

1. இறைவார்த்தைப் பணியாளர் உருவாக்கத்தை ஊக்கப்டுத்தல்;
2. இறைவார்த்தை சம்பந்தப்பட்ட கருத்தரங்குகள், கண்காட்சிகள், தியானங்கள் போன்றவற்றை மேற்கொள்ள திட்டங்கள் தீட்டுதல்;
3. இறைவார்த்தை பொறிக்கப்பட்ட பதாதைகளை நிறுவுதல்.

***இ) பங்குகள் ரீதியாக:***

1. இறைவார்த்தையை இல்லங்களில் அரங்கேற்றல்;
2. இறைவார்த்தையை அன்பியங்களின் உயிர்நாடியாக்குதல்;
3. மறைக்கல்வியினை இறைவார்த்தை மயப்படுத்துதல்;
4. சிறப்பான விவிலியவார அனுஷ்டிப்பு;
5. பங்கின் அனைத்து நிகழ்வுகளிலும் இறைவார்த்தைப் பாவனையை அதிகரித்தல்.

3. முத்திப்பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகளாரின் வழிகாட்டல்:

மறைந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் ***'இலங்கைத் தீவின் பவுல்'*** என்று அழைக்கப்பெற்ற முத்திப்பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகளார், இறைவார்த்தையின்மீது கொண்ட தணியாத தாகத்தால் உந்தப்பட்டு, இறை வார்த்தையின் வழியாகிய நற்செய்தி அறிவிப்புப்பணியில், தன்னையே முழுமை யாக கொடுத்து, மேய்ப்புப்பணி அலுவல்களுக்கு உதாரண புருஷராக நம்முன்பு திகழ்கின்றார். அவரின் அடிச்சுவட்டினை பின்பற்றி நற்செய்திக்கு சான்றுபகரும் பொறுப்புமிக்க பொதுநிலையினர், இன்றைய காலத்தின் தேவையாகும். பொது நிலையினர் தங்களது அர்ப்பணத்தாலும், வாழ்வாலும் கிறிஸ்துவுக்கு இவ்வுலகில் சாட்சியம் கொடுக்க வேண்டும். தத்தம் பருவத்திற்கும், அழைப்பிற்கும் ஏற்ப, பல்வேறு நிலைகளில், பங்கின்

மேய்ப்புப்பணி அலுவல்களில், பணித்தள பணியாளருடன் இணைந்து ஒத்துழைக்கின்ற உடன் ஊக்குவிப்பாளர்களாக பொதுநிலையினர் செயற்பட, புத்தாண்டில் அழைப்பு விடுக்கின்றோம். இவ்வாறு முன்வருகின்ற பல்வேறு பொதுநிலைனருக்கு வேண்டிய பயிற்சிகள், பங்குகள், மறைக்கோட்டம் மற்றும் மறைமாவட்டம் ரீதியாகவும் வழங்கப்பட்டு, அவர்கள் ஆன்மீக, சமூகப் பணிகளில் ஈடுபட ஆற்றலையும், சக்தியையும் கொடுக்க வேண்டும். இதற்கான பணிகளில் மறைமாவட்ட ஜோசப்வாஸ் செயலகமும் முயற்சிகளை முன்னெடுக்கும்.

முடிவுரை:

இறைவார்த்தைப் பணிக்கு முன்னுரிமை வழங்கும் இவ்வாண்டில், இறைவார்த்தைப் பணியானது மனுவுருவான கிறிஸ்துவின் அன்பு வழிகளைப் பின்பற்றி நமது சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் வெளிப்படட்டும். கிறிஸ்துவின் அன்பினை அனைவரோடும், விசேடமாக அல்லல்படுவோரோடு, பகிர்ந்து கொள்வதன் வாயிலாக, உண்மைக் கிறிஸ்தவ சாட்சிகளாவோம். மறைமாவட்ட செயல்திட்டங்களை முன்னெடுக்கவும் முயல்வோம். இறையாசீரும், அன்னை மரியாளின் பரிந்துரையும் நம்மோடு தங்குவதாக!

கிறிஸ்துவில் உங்கள்மேல் என்றும் பற்றுள்ள

பேரருட்திரு. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
(திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்)

**குறிப்பு: இம்மடலை 11. 01. 2009 கிறிஸ்துவின் திருமுழுக்கு திருவிழா திருப்பலியின்போது நமது மறைமாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் வாசித்து, இறைமக்களுக்கு விளக்கமளிக்கவும்.**